உ

கடவுள் துணை.

# தாயாரிடம்
# பெண்புலம்ப
## தாய்விடைகொடுத்தல்.



இவை,

செஞ்சி-ஏகாம்பரமுதலியாராலியற்றப்பட்டு,

ஆ-இரத்தினவேலுமுதலியாரது
வாணீவிலாஸ அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1898

உ

கணபதி துணை.

---

# கணவன் நடத்தையை
# தாயாரிடம்சொல்லி புலம்பல்.

பெண்ணவளுந்தான் கலங்கி பெற்றவளைமுன்னேகி
கண்ணீருந்தான் சொரியக் கதறியவள்—மண்ணின்மேல்
புருஷனுடைநடத்தையெல்லாம் புகலுதற்குமுன்னேங்கி
வருவதிற்கவேழைமுகா வா.

நான்முகம்-விருத்தம்.

அன்னையேயென்னசெய்வேனாகாதபாவியான
மன்னவன்தனக்குவென்னை மாலையும்முடித்ததாலே
சின்னநல்வயதிற்காணும் சுகமெலாந்துறந்துயிப்போ
கன்னியும்புலம்புவாளை காதினால்கேளுந்தாயே.

இ-ம்-நாதநாமகிரியை-ஆதிதாளம்

பல்லவி.

எப்படிசம்சாரஞ்செய்குவேன்—அடியம்மா தாயே
ஐயையோபாவி எவ்விதங்காலட்சேபஞ்செய்வேன்

அநுபல்லவி.

எப்படிசம்சாரஞ்செய்குவேன் சொற்படிக்கடங்காநாயனை
செப்படிசெப்படியென்று தப்புந்தாறுமாயேசுறானே. (எப்)

சரணம்.

ஆண்டிசன்னாசியையழைக்குறான்—அவர்க்கன்னமிட்டு
அபினிகெஞ்சாதனைப்பொசிக்குறான்—சர்வமயமாய்
வேண்டியப்பொருளும்முதென்கிறான்—அடிமூளிமுண்டை
விழடியவர்காலிலென்குறான்

ஆண்டிப்பயல்தாண்டிமுன்னே யோர்விழுத்து
எங்கியேமானங்குலைந்தான்யேண்டியேண்டியேண்டியென்குறான் (எ)

மஞ்சள்திலர்தம்மேண்டியென்குருன்—மாறனைபோக்க
வந்தவெள்ளாட்டியென்குருன்—அபிராமிதாயே
தஞ்சமுனதடிபதமேயென்குருன்—மாபாவியவன்
சர்ப்பம்போலே விஷமா குருன்

அஞ்சலென்றஞ்சியேகொஞ்சி யருகினிற்சென்றிட்டாலும்
பஞ்சமாபாதகன்பக்ஷம்கொஞ்ச மில்லாமல்யேசுருன் (எப்)

ஈசனெழுதிவிட்டகட்டளையோ—யெவ்வர்னவயதில்
இப்படிவினுனதும் சரியோ—மாபாவிபவன்
தேடிதாலிகட்டின குறையோ—செரக்தமாயன்மகன்
சுந்திரவழகானதாலேயோ

எந்தவைபோகமறியேன் கித்தனைக்காளானேனம்மா
சிந்தையும்கலங்கிவாடி நொந்துநானழுது சும்மா (எப்)

பெண்ணுப்பிரந்ததோஷமோ மாபாவிவயற்றில்
பிரவியெடுத்தகர்மமோ ஏழைகளைகண்
டெண்ணுமல்பேசினகர்மமோ பாழுடலைநிதம்
என்னுதென்று கொண்டகெர்வமோ

பண்ணவினைபோகாதென்று சொன்னபெரியோர்மொழிபோல்
இண்ணெனக்குநேர்ந்ததம்மா யென்னைகொண்டபாவிதன்னுல் (எப்)

எலும்புதோலும்ரத்தமென்குருன் யிந்தவுடலுக்
கேண்டிநித்தம்சுத்தியென்குருன் முண்டைமகன்
சலித்துகாவிவேஷ்டிகட்டுருன் ஸ்தளங்கள்தோறும்
சாமிசாமியென்றுவோடுருன்

வலியஆண்டியையிழுத்துவாருன்வடித்தசாதத்தைகொட்டுமென்ருன்
புலியைபோலேயென்னைசீரி போடடிபோடடியென்ருன் (எப்)

மெத்தைமேடைகள்சம்பமென்குருன்—நல்லாடைபணிகள்
மெய்யில்தரிப்பது வேஷமென்குருன் மீத்தொருகாசி
வைத்தாலதுயேதுக்கென்குருன் நாளையாவிபோனுல்
வருகுமோவது கூடவென்குருன்

சித்தமும்முருகபேசுருன் சிவனேசிவனேயென்றுஅழுகுருன்
புத்திகெட்டவள்யெனக்குவேண்டாம்போடிபோடிபோடியென்ருன்

நித்தம்வேதம்படிக்குருன்—புராணமெல்லாம்
கற்றவன்போல்துள்ளுருன்—லாகிரிநேசம்

சற்றுகிலும்விடனென்குறுன்—விருந்தில்லாமல்
தாகசாந்திகள் செய்யனென்குறுன்

முத்திவந்தவன்போலேதினமும் முழுகிபாசிபூஜைசெய்குறுன்
பித்தமேரியென்னேநாளும் பேயனைப்போல்சீரிவருகிறுன் (எப்)

பந்துசெனங்களும் வுதவாதென்குறுன்—பணமிருந்தால்
வந்துகூடும்வேணதென்குறுன் பொருளில்லாவிட்டால்
கண்டாலுமவர்பேசாரென்குறுன் அண்ணன்தம்பியும்
கண்ணெடுத்துப்பாரரென்குறுன்

இந்தவிதமாகபேசி யென்னேரமும்வாதுசெய்குறுன்
நிந்தையானசந்தைசுகத்தை நினவிலும்மரந்திடென்றுன் (எப்)

பருப்பும்பலவிதகரிகள்கூட்டியே பாலுடன்னெய்யும்
பாமுடலுக்குதினமூமூட்டியே வளர்த்ததிரேகத்தை
விருப்பமாய்காலன்வந்துகட்டியே யிழுக்கும்போது
வலுவுசெய்யுமோ வேண்டிமட்டியே

பெருத்ததிரேகத்தைவளர்த்தாலே யிருப்பமோசாசாமல்மேலே
நெருப்பிலேயழியும்நாளே நிஜமேநிஜமேநிஜமேயென்றுன் (எப்)

ஐயமிடாசண்டியென்குறுன் பார்க்கவைத்தன்னம்
எதிரிலுண்ணும்மட்டியென்குறுன் தினந்தினமும்
சொய்யபேசியென்னேவாட்டுறுன் வரும்விதியை
நம்மால்விலக்கபோகாதென்குறுன்

வையகத்தில்பொருள்தேடிவைத்துமாண்டார்கோடியென்றுன் [றுன்
பொய்யோயிதுமெய்யோகூடபோச்சேசபோச்சோபோச்சோயென்

பிள்ளைகண்களில்மைகள்தீட்டியே மாரனைபூட்டி
புத்திகெடுக்கும்சண்டாளிமுண்டையே கொண்டையில்பூவு
வேளைக்கொருவிதமாகசூட்டியே பீத்தோலின்மீது
வாசனைகள்தினமும்பூசியே

காலனுக்குங்காலனென்று கண்டபெரியோர்கள்சொன்ன
சேலைகட்டியமாதேகிட்டசேராதேசேராதேயென்குறுன் (எப்)

மனமுருகவார்த்தைபேசியே—மையலைபூட்டி
மானம்கெடுத்துகெருவிலேசியே கள்ளத்தனமாய்
இனமாயண்டையில்நேசமாகியே யின்னொருபுருஷனை
இழுத்துவோடுலண்டசிரிக்கியே

கட்டினவர்க்கென்னசுகம் கலங்கிடும்சம்சாரரோகம்
எட்டடிஎட்டடியென்றுதிட்டியென்னைவோட்டுகிறுன் (எப்)

சினம்வருவதுபெண்ணுலென்குறுன்—பெதிரிகையில்
சாகசெய்யும்விணுயென்குறுன் வார்த்தைக்குவார்த்தை [ல்
சிரித்துகுடியைகெடுப்பாளென்குறுன் முன்ஞேர்கள்பெண்ணு
சிரழிந்ததைகேளுமென்குறுன்

நாணிஇந்த்ரன்வின்னமானுன்நாசமாயிராவணன்மாண்டான் [ன்குறுன்
வேணபேர்கள்பெண்ணுலகெட்டார்வேண்டாவேண்டாவேண்டாமெ

சித்திராங்கியின்சேதிகேளென்றுன்—சாரங்கதரனை
சரசமாய்கூடஅழைத்தாள்முன்னென்றுன்—பிள்ளையென்றும்
சற்றுமாகிலும்பெண்ணு பெண்ணென்றுன்—கையுங்காலையும்
சணத்தில்வாங்க நினைத்தபாவியென்றுன்

இத்தரையில்பெண்கள்மோசம் யெவர்களாலறியக்கூடும்
சித்தமும்னடுங்குதையோ சிசிசிசி வேண்டாமென்றுன் (எப்)

கீச்சகன்கெடதணத்தில் மாண்டானே—பெண்ணுசைகொண்டு
சூர்ப்பநகைமொழி நம்பிசெத்தானே—ராவணன்பாவி
இச்சையானரிஷிதபசழிந்தாரே—ஊர்வசிபெண்ணுல்
இன்னம்பிரமனேர் சிரசொழிந்தானே

இப்படிபெண்கள்மாயம் யிதைவிடுவீரென்றுமுன்னேர்
செப்பியநூலைபடித்து யெப்படிநம்புவேனென்றுன்

கரடிபுலிகளைநம்பலாமென்றுன்—யானையைகூட
கட்டிதழுவியேகொஞ்சலாமென்றுன்—விஷநாகனையும்
பிரியமாய்வைத்து பழகலாமென்றுன்—காலன்முன்னையும்
பயமில்லாமலே யேகலாமென்றுன

அரியபோமோபெண்கள்மோசம் அண்டினுல்வருகும்னுசம்
தெரிவிலேநின்றேகலங்கி திகைத்திடசெய்வாளேயென்றுன் (எப்)

பஞ்சமாபாதகியென்குறுன் என்முகத்தை
பார்க்கக்கண்கள்கூசுதென்குறுன் தாவடம்பூண்டு
மெஞ்ஞானங்களைபேசிபுலம்புறுன் வீணிலென்னை
மிரட்டிமிரட்டியேதுரத்திலாட்டுறுன்

செஞ்சிவகாம்பரங்கவியாய் சொன்னதெல்லாம்சரியேபாரும்
வஞ்சனையாம்யித்தைதீரும் வழியெனக்குசொல்லிநாரும்

# தாயார்பெண்ணுக்கு சொல்லும் வினுவிடை

## விருத்தம்.

கண்ணேயென்மகளேகேளாய் கணவனைவெறுக்கப்போமோ
நண்ணியேயவர்தான்சொன்ன னியாயமும்சரிதானம்மா
மண்ணின்மேலவரேதெய்வ மாகவேநம்பினாலும்
எண்ணியபெண்களுக்கு யிடரதுயில்லைப்பாராய்.

இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்

## பல்லவி.

நற்புக்திதன்னையேதேடம்மா—அடியென்மகளே
என்கண்மணியே நாயகன்தெய்வமென்றெண்ணம்மா

## அநுபல்லவி.

நற்புத்திதன்னையேதேடும் அற்பருரவினிஜாடும்
கற்புக்குணத்தைநாளும் காருங்காருங்காரும்மகளே (நற்)

## சரணங்கள்.

ஆளனைகைவிட்டதுரோகிகள்—உடனேகெட்டு
அல்லவாசென்றுசொன்ஞர்பெரியோர்கள் தப்பாதுமகளே
காளபுத்தியில்வரும்ரோகங்கள்—அரியாமல்செய்து
கலங்குவார்கள் பின்னால்வெகுபேர்கள்

நானாவரும்விதியையென்ன நாம்பளென்னகண்டோமென்று
மாளுதேபுவியில்கோடி மகளேமகளேமகளேயின்று (நற்)

குண்டுணிகள்பேச்சைக்கேளாதே—யெதிரில்சொல்லா
குற்றமதைப்பேசாதே புவியின்மீது
சண்டைசெய்துபகைத்துக்கொள்ளாதேசாதுக்கள்வாக்கால்
சாபங்கொடுத்தால் வாழ்வுகில்லாதே

லண்டைவார்த்தைகள்தினமும்பேசி கொண்டவன்மனம்நோகசிரும்
சண்டிசிரிக்கிகள்நேசமுனக்கு சற்றும்சற்றும்வேண்டாம் (நற்)

துஷ்டப்பெண்களின்னேசம்செய்யாதே—கணவன்மீது
தோஷவார்த்தைகள்பேசி திரியாதே அவர்யிட்டவேலையை
கஷ்டமென்றுநீகடிந்துபேசாதே யிருவர்மனமும்
கலந்துவாழ்ந்தால் குற்றம்வாராதே

பட்சமாய்சிறுத்தொண்டருக்கு பாரியாள்திருநங்கையாரும்
இச்சையாய்நடந்ததாலே யேகினுர்மோட்சமுமேலே (நற்)

நன்மைதுன்மைமோகண்டுமுண்டடி—புவியின்மீது
நமக்களித்ததுவிலகிபோமோடி வீணாசையாலே
எண்ணம்கொண்டதால்யேதுமில்லடி பொய்யானதேகம்
இறக்குமுன்னேயருளைதேடடி

அன்றுநளன்தமயேந்தியை அடவியில்விட்டேகும்காலில்
நின்றுமேபுலம்பிகணவன் னினைவையேமதித்தவள்போல் (நு)

ஏழையர்க்கன்னம்யிட்டுயேசாதே—மாபாவியென்று
எவர்களும்சொல்லபேரெடுக்காதே் மாமிமாமனார்க்
கூழியங்களைசெய்யகூசாதே சாதம்வைத்துமின்
டில்லையென்றுபசியோர்க்கு சொல்லாதே

வாழுங்காயம்போரமாயம் நீர்மேற்குமிழினிற்கும்நிறம்
சேயிழையேயிதைமதித்து சிறுய்புவிமேல்நடந்தும் (கற)

அடிக்கடிதெருவந்துபேசாதே கூனுகுருடனை
அழைத்துயேளிதம் பழித்துசொல்லாதே பகையாளருயினும்
கெடுக்கமனதில்எண்ணங்கொள்ளாதே உள்ளொன்றுவைத்து
கபடமாகனீபேசிகெடுக்காதே

படியின்மீதுநியாயம்ஒருவர் பக்கமாகபேசவேண்டாம்
வடிவமுள்ளயென்மகளே வாழாபெண்கள்னேசம்வேண்டாம (கற்)

கணவன்மீதுதூருசொல்லியே—தனிவழியோட
கலைக்கும்பெண்கள்னேசம்தள்ளியே அவன்யேழையாயினும்
குணத்தின்படியோருநம்பேசியே யிருந்தையானால்
கொடிமுடியின்பதவிகொள்ளவையே

பணமும்காசியும்தினமும்தேடியே பாவியென்றுவுலகமேசிடும்
வினையாமிந்ததொல்லைவாழ்வுவேண்டாவேண்டாவேண்டாமகளே(ந)

ஆதியில்வாழ்ந்ததைதள்ளுவார் நடுவில்வந்த
அயிஸ்வரியத்தால்பேசிதுள்ளுவார் பஜாரியென்று
வீதியேகிசண்டைபோடுவார் ஆண்பிள்ளையெதிரினில்
வெழ்க்கமானமில்லாமல்பேசுவார்

யிருக்குமாடவர்யிருக்கட்டென்று யீனவார்த்தைபேசும்பெண்களின்
உரவுனக்குசற்றும்வேண்டாம் உரைத்தேன்உரைத்தேன்உரைத்தே

விருந்துவந்தோரை வேண்டியழைத்துமே முகமலர்ந்து
வழங்கியன்னம்படைக்கவேணுமே கூழாகிலுந்தான்

பிரியமாயிட அமுர்தமாகுமே யிப்படிமுன்னோர்
புகன்றமொழியை நம்பிபாருமே.

கருமமுமணுகிடாது கலியுகமுள்ளவரைக்கும்
வரமதுபெறுவாய்பெண்ணேவாழியென்றேயானும்சொன்னேன் (ரு)

பத்தினிகளைபழிக்கவில்லையே—புருஷர்க்கேத்த
பாவையர்தனையிகழவில்லையே யித்தனைமீதில்
குற்றமாகநான்சொல்லவில்லையே நடக்கும்சேதியை
கூரினதால்குற்றமில்லையே

சித்தமாய்யேகாம்பரமும் சொன்னகவியையானுரைத்தேன்
நித்தமுமிதைபடித்து புத்தியோடுவாழ்மகளே (௬)

கும்மி.

கணவன்னடத்தைதனையகண்டுபுலம்பியே கன்னியும் தாயிடம்வந்துரைக்க குணமாயவளுக்கு வேணபுத்திசொல்ல குமரியும்பக்திபுரிந்தனளே. க

அன்னையேநீசொன்ன வாக்கியம்தன்னையான் அல்லும்பகலும் மறவேனம்மா, இன்னம்கலியுகநடத்தையெல்லாங் கொஞ்சம்யெனக்குதெரிய உரையுமம்மா. உ

ஆனால்மகளே நீதான்கேளும்யிந்த அனியாயவாழ்வையான் கூறுகிறேன், வீணிலேபுத்திசெலுத்தாமல் யிதை விபரமாய்க் கேளடியென்மகளே. ௩

மெத்தைமேடைகளும் கட்டிக்கொள்வார்அதில் சித்திரபடங்கள்மாட்டிகொள்வார், கூத்தன்வந்து அழைத்து கெட்டுங்காலில்கூடபோகாதடி யென்மகளே. ௪

யேழைவாயடித்து பொருள்பறிப்பாரதை யென்னுதென்னுதென்று புதைத்துவைப்பார், கோழையுடன்செபம் கட்டியிழுக்கையில் குரிப்புசொல்லாரடி யென்மகளே. ௫

வீணிலொருவர்மேல்பகைகொடுப்பார்யினி-வைப்பேனோயிந்த புவியிலென்பார், தான்போரகெதிபரியாமல் பேசிடுவார் தன்மானமில்லாமடையரடி. ௬

அண்ணன்தம்பிபந்தயேதுக்கடிதேடும்ஆஸ்திபாஸ்தியெல்லாம்வீணுக்கடி, கண்ணேதன்னுளம்வாழும்சிவனையாம் கண்டாலமோட்சம்வருகுமடி. ௭

முற்றிற்று.